மக்பெத்

MACBETH

இது

ஷேக்ஸ்பியர் மகாகவியின் நாடகத்தை அனுசரித்து

லாம்ப் (LAMB)

என்பவர் ஆங்கிலத்தில் எழுதியதை

ராவ்பஹதூர் - ச. பவானந்தம் பிள்ளை அவர்கள்

எப். ஆர். எச். எஸ். (லண்டன்.) எம். ஆர். ஏ. எஸ் (லண்டன்.)

மொழிபெயர்த்தது.

PUBLISHED BY
LONGMANS, GREEN & CO.
167, MOUNT ROAD, MADRAS.
BOMBAY AND CALCUTTA.

சென்னை:

1917

Copyright registered.] [ரிஜிஸ்தர் செய்தது.

இக்கதையில் வந்துள்ள

பாத்திரங்கள்

1. டங்கன், (Duncan) ஸ்காட்லாந்து தேசத்து அரசன்.

2. மால்கம், (Malcolm)
3. டனுல்பின், (Donalbain) } ஷை அரசன் புத்திரர்கள்.

4. மக்பெத், (Macbeth)
5. பாங்கோ, (Banquo) } சேனுபதிகள்.

6. ப்ளீன்ஸ், (Fleance) பாங்கோவின் குமாரன்.

7. மாக்டப், (Macduf) ஒரு பிரபு.

8. மக்பெத் மனைவி, (Lady Macbeth).

மாயப்பிசாசப் பெண்கள் மூவர், பிரபுக்கள், வேலைக்காரர் முதலியோர்.

மக்பெத்

சாது என்னும் சிறப்புப்பெயர் பெற்ற டங்கன் (Duncan) அரசன், *ஸ்காட்லாந்தில் (Scotland) அரசாண்டகாலத்தில், மக்பெத் (Macbeth) என்னும் பிரபு ஒருவன் இருந்தான். இவன், அரசனுக்கு நெருங்கிய சுற்றத்தார்க்குள் ஒருவன்; யுத்தம் நடத்தும் முறைமையிலும் திறமையிலும், இவனை அரச சபையார் உயர்வாக மதித்திருந்தார்கள். இதற்கு உதாரணமாக, *நார்வே (Norway) சைன்னியங்களின் உதவியால், இராஜாதிகார விரோதிகளாகக் கிளம்பிய சேனா வீரர்களை, அப்பொழுதுதான், இவன், தோற்கடித்திருந்தான்.

இந்த யுத்தத்திலிருந்து திரும்பிவந்து கொண்டிருந்த மக்பெத், பாங்கோ (Banquo) என்னும் சேனாபதிகள் இருவரும் இடைவழியில் ஒரு †சம்பங்காட்டைக் கடக்க நேர்ந்தது. அங்கே பெண்களைப் போன்ற மூன்று உருவங்கள் தோன்றின. அவைகளுக்குத் தாடிகளும் இருந்தன. அவைகள், திரைந்த தோல்களையும் குலைந்த உடைகளையும் பெற்றிருந்தமையால், பூலோகப் பிராணிகளாகத் தோன்றவில்லை. அவைகளைக் கண்டவுடன், மக்பெத் அவைகளின் வரலாற்றை வினவினான்; அதற்கு அவைகள் வெறுப்புற்றன போல நடித்து, அவன் பேச்சை நிறுத்துவதற் கடையாளமாக, ஒவ்வொன்றும் அதனதன் பிளவுபட்ட விரலை, தோல் உதட்டின்மேல் வைத்துக் காட்டிற்று. அவைகளில் முதலாவது உருவம், மக்பெத்தை "கிளேமிஸ் பிரபூ!" (Glamis) என்னும் பட்டப் பெயரிட்டழைத்து வாழ்த்தியது. அதைக்கேட்ட மக்பெத் "இந்த விகாரவுருவத்துக்கு, நமது பெயர் எப்படித் தெரிந்தது" என்று மருண்டதற் களவில்லை.

---

* ஸ்காட்லாந்து, * நார்வே } இவை யிரண்டும் ஐரோப்பாக் கண்டத்திலுள்ள தேசங்கள்.

† சம்பங்காடு=சம்பம்புல் அடர்ந்த காடு.

இந்த வாழ்த்தைத் தொடர்ந்தே, இரண்டாவது உருவம், "கௌடர் (Cowdor) பிரபு!' என்னும் பட்டப் பெயரிட்டழைத்து அவனை வாழ்த்தியது; இந்தப் பட்டப்பெயர்க்கும் அவனுக்கும் சம்பந்தமே கிடையாது; இதைக்கேட்டதும், அவன் இன்னும் அதிகம் மருண்டான். உடனே, மூன்றாவது உருவம், அவனை நோக்கி, "இன்னும் சிலநாட்களுக்குள் அரசனாகப்போகிற நீ வாழ்க, வாழ்க" என வாழ்த்தியது. *தீர்க்க தரிசனாசீர்வசனமாகிய இதனைக் கேட்டபோது, மக்பெத், "அரசனுடைய மைந்தர், ஒருவர்க்கிருவர் உயிருடன் இருக்கிறார்களே! நாம், எப்படி இந்த அரசனுக்குப்பின், பட்டம் பெறுவோம்!" எனத் திகைத்தான். பிறகு, அவைகள் பாங்கோவைத் திரும்பி நோக்கி, "நீ மக்பெத்தைப் பார்க்கிலும் அதிர்ஷ்டத்திற் குறைந்தவன். ஆனால் ஒருகாலத்தில், அவனிலும் அதிக அதிர்ஷ்டசாலியாவாய்; அவனைப் போல அத்தனை பாக்கியசாலியல்ல; ஆனால் ஒரு காலத்தில் அவனிலும் அதிக பாக்கியசாலியாவாய்" என விசித்திரவார்த்தைகளைப் பேசி, "நீயே அரசாளாவிட்டாலும், உனக்குப் பிறகு, உனது மைந்தர்கள், ஸ்காட்லாந்தில் (Scotland) அரசர்களா யிருப்பார்கள்" எனத் தீர்க்க தரிசனங்கூறிப் பிறகு ஆகாயமார்க்கத்தில் மறைந்துபோயின. அதனைக்கண்ட சேனாவீரர்கள் அவைகளை, மாயப் பிசாசப்பெண்களென உணர்ந்தார்கள்.

இந்த †அபரூபத் தோற்றத்தை அவர்கள், தமது மனங்களில் நிறுத்திப் பார்த்துக்கொண்டு நிற்கையில், அரசதூதர்களிற் சிலர் அங்கே தோன்றி, மக்பெத்தை நோக்கி, "கௌடர் பிரபு என்னும் பட்டத்தை உனக்குச் சூட்டும்படி அரசன் எங்களுக்கு அதிகாரங் கொடுத்தனுப்பி யிருக்கின்றான்" என்றார்கள். மாயப்பிசாசங்கள் கூறிய தீர்க்கதரிசனத்திற்கு, ஒரு சிறிதும் பிறழாத இவ்வற்புத நிகழ்ச்சி, மக்பெத்துக்கு அதிசயம் விளைத்தது. ஆகையால் அவன் ஆச்சரியத் திரையால் மறைப்புண்டு, தூதர்களுக்கு விடைகூறாமல் திகைத்தான். அதற்குள் அவனுக்கு "மூன்றாவது மாயப்பிசாசம் கூறியதும், இதுபோலவே நிறைவேறும்; ஒரு காலத்தில், நாம் ஸ்காட்லாந்தில் அரசனாகி ஆளுவோம்" என்னும் பெரிய எண்ணங்கள் உண்டாயின.

அவன், பாங்கோவை நோக்கி "உனது மைந்தர்கள் அரசாள்வார்கள் என்று நீ நம்பவில்லையா? இதோ பார், மாயப்பிசாசங்களின் வாக்கு என்விஷயத்திற் பலித்திருக்கின்றது" என்றான். அதற்குப்

---

* தீர்க்கதரிசன ஆசீர் வசனம்=திரிகால முணர்ந்து ஆசீர்வதித்தல்; இங்கே எதிர்காலத்தைக் கொள்க.

† அபரூபம்=அருமை அல்லது அவலக்ஷண ரூபம்.

பாங்கோ "இந்த நம்பிக்கை, சிம்மாசனத்தைப் பெறவேண்டும் என்னும் பேராசைத் தீயை உனக்குள் மூட்டிவிடும்; கெடுவழி காட்டிகளாகிய மாயப்பிசாசங்கள், பெரும்பாலும் அற்பவிஷயங்களில் உண்மையை நாட்டி, பேரழிவுக் காதாரமாகிய தீவினைப்படுகுழியில் நம்மை வீழ்த்துகின்றன" என்றான்.

மாயப்பிசாசப்பெண்களின் வாக்குகள், மக்பேத் மனதில் ஆழப் பதிந்திருந்தன. ஆதலால் அவனுக்கு அவன தருமை நண்பன்,

"நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு"

என்றபடி உண்மையாகக் கூறின உறுதிமொழியை நினைத்துப் பார்க்க நேரமில்லாமற் போய்விட்டது. அதுமுதல் மக்பேத், ஸ்காட்லாந்தரசாட்சியைப் பெறுஞ்சூழ்ச்சியிற் சிந்தை செலுத்தினன்.

மக்பேத்துக்கு ஒரு மனைவியிருந்தனள்; அவளைக் கண்டவுடனே அவன் "காதலீ! யுத்தத்தில் வெற்றிபெற்று நான் திரும்பிவந்து கொண்டிருந்தபொழுது இடைவழியில் என்னை மூன்று மாயப்பிசாசப் பெண்கள் சந்தித்தார்கள். என்னை அவர்கள் 'காடர் பிரபு' என்கிற பட்டப்பெயரிட்டழைத்து, 'நீ அரசனுவாய்!' என்று ஆரூட ஆசீர்வாதஞ் செய்தார்கள். அவர்களுடைய வாக்கு தப்பாமற் பலிக்கும்" என்று தெரிவித்தான். அவள் மிகவும் பொல்லாதவள்; பேராசைக்காரி. ஆகையால், தானும் தனது கணவனும் எப்படியாவது உயர் பதவியைப் பெறவேண்டும். அது எந்தவிதத்திலாயினும் பரவாயில்லை என்று துணிந்திருந்தாள். அவ்விஷயத்தில் மக்பேத்துக்கு அத்தனை விருப்பம் இல்லை; "இது என்ன இது! தர்மசங்கடமாயிருக்கின்றதே! ரத்தஞ்சிந்தியல்லவோ ராஜ்ஜியத்தைப் பெறவேண்டும்! அரசனைக் கொன்றபிறகல்லவோ அதிகாரம் பெறவேண்டும்! அப்போதுதானே மாயப்பிசாசங்களின் ஆரூடம் பலிக்கும்! ரத்தஞ்சிந்துவதென்றால் சாதாரண காரியமா? அரசனைக்கொல்ல மனம் எப்படித் துணியும்?", என்று அனுதாபப்பட்டுக்கொண்டிருந்தான். அவன் மனைவி மட்டும் உற்சாகப்பட்டுக் கொண்டிருந்தாள்.

அந்தக் காலத்தில் அரசன் தன்னிடத்தில் உயர்தர உத்தியோகம் வகித்த சீமான்கள் வீட்டுக்கு அடிக்கடிச் சென்று பெருமைப் படுத்துவது வழக்கம். அதுபோலவே இப்போதும் அவன் தனது இரண்டு குமாரர்களாகிய மால்கம் (Malcolm), டனல்பின் (Donalbain) என்பவர்களோடு மக்பேத் வீட்டுக்கு வந்தான். அவனோடு கூட எத்தனையோ பிரபுக்களும் ராஜாங்க சேர்வைக்காரர்களும் சேவையாட்களும் வந்திருந்தார்கள். இத்தனை ஆடம்பரமாக அரசன்

வந்த காரணம், மக்பெத் அடைந்த வெற்றிக்காக அவனைக் கௌரவப்படுத்துவதேயாம்.

மக்பெத் இருந்த அரண்மனை வசதியாய்க் கட்டப்பட்டிருந்தது. காற்று உல்லாசமாய் வீசியது. அரண்மனையைச் சுற்றி ஒதுக்கிடங்களில் தூக்கணாங்குருவிகளும் ஊர்க்குருவிகளும் கூடுகட்டிக் குடியிருந்தன. இந்தப் பறவைகள் அனேகமாய் வசதியாய்க் காற்றோட்டமான இடங்களிலேயே கூடுகட்டிக் குஞ்சுபொரித்து வாழும் என்பது எல்லார்க்கும் தெரிந்த விஷயம். இடவசதியைக் கண்டவுடனே அரசன் அகமகிழ்ந்தான்; தன்னுடைய வரவை ஏற்ற அந்த அகமுடையாளாகிய மக்பெத் பெருமாட்டியின் மரியாதைக்கும் கண்காணிப்புக்கும் மிகமகிழ்ந்தான். அவளோ உண்மையில் உத்தமியன்று. புன்னகை நகைத்துத் திரிபுரமெரித்த விரிசடைக்கடவுள்போல நகையாலேயே பகையை முடித்துவிடுவாள். ஆகையால் அவளுக்கு நயவஞ்சகி யென்கிற பட்டப்பெயரைச் சூட்டலாம். உள்ளே சிறுநாகப்பாம்பை வைத்துக்கொண்டிருக்கிற தாழம்பூவும் அவளும் சமம்.

பிரயாணத்தால் இளைத்திருந்த அரசன் அதிசீக்கிரத்தில் பள்ளியறைக்குள் சென்று படுத்துக்கொண்டான். வழக்கம்போல அவனுடைய அந்தப்புர வேலைக்காரர் இருவர் அவனுக்கருகே படுத்துறங்கினார்கள். அவ்வகமுடையாள் தன்னை வரவேற்றுச் செய்த உபசாரத்திற்குப் பெருங்களிப்படைந்திருந்தான் அரசன். அதனால், அவன் தான் படுக்கைக்குப் போகும் முந்தியே தன்னுடைய பிரதான உத்தியோகஸ்தர்களுக்கெல்லாம் சன்மானஞ் செய்திருந்தான்; மக்பெத் பெருமாட்டிக்கு விலையுயர்ந்த மாணிக்கம் ஒன்றை வெகுமதியாக வழங்கி 'நீ பல்லாண்டு வாழி' என்று வாழ்த்தியிருந்தான்.

நடுராத்திரியாயிற்று. சராசரங்களெல்லாம் சலனமற்றிருந்தன. பேயும் உறங்கிற்று. உறங்கும் மாந்தர்களுடைய கனவில் பற்பல *உற்பாதங்கள் தோன்றின.

'காற்றடிப் பதனால் ககன மளாவிய
கோபுரச் சிகரம் குலைந்து வீழ்ந்தன;
அந்தர வாசிகள் அழுது புலம்பினர்;
படுகொலைக் காகப் பலபேர் அரற்றினர்;
அதுகேட் டனைவரும் அகந்திடுக் கிட்டனர்;
கேடு காலம் கிட்டிய தென்று
பயங்கர மாகப் பலபேர் பேசினர்;
புவனம் அதிர்ந்தது; பூமி எரிந்தது;

* உற்பாதங்கள்=கெட்ட சகுனங்கள்.

சாக்குருவிக் குரல் தேக்கி
யெங்குங் கேட்ட தமங்கல மாயே'

கொலைபாதகனும், கோனும், கொடியமனக் கள்ளனுமே விழித்துக்கொண்டிருந்தார்கள். இந்தச் சமயத்தில்தான் மக்பெத் பெருமாட்டி விழித்துக்கொண்டாள்; அரசனைக் கொல்லும் சதியாலோசனை செய்வதற்காகத் துடித்துப் பதைத்து எழுந்திருந்தாள். இவள் அத்தனை அவசரமாக எழுந்திருந்திருக்கமாட்டாள். இவளுக்குப் புருஷன் விஷயத்தில் சந்தேகம். 'நாம் எண்ணினபடி அவன் கொலைக்கு உடன்படமாட்டான். அதிக இரக்கமுள்ளவன்' என்பது இவளுடைய தீர்மானம். அவனுக்கு உயர்பதவியில் விருப்பம் என்பது இவளுக்குத் தெரியும். ஆனாலும் 'அவன் பழிக்கஞ்சுவான்; கொலைக்குப் பின்வாங்குவான்' என்பதையும் இவள் அறிவாள். ஆகையால் இவள் எப்படி எப்படியோ அவனைப் பக்குவம் பண்ணிப் படுகொலைக்கு உடன்படுத்தி யிருந்தாள். அப்படி உடன்படுத்தியிருந்தும் அவன் விஷயத்தில் இவளுக்குச் சந்தேகம் சந்தேகமே! ஆகையால் இவள் அவனை நம்பவில்லை; "இவர் சென்றால் ஒருவேளை காரியம் முடியாது. இவர்க்கு எந்நாளும் இரக்கமே இயல்பாயிருக்கின்றது. மிகவும் இளகின மனமுடையவர்; நம்மைப்போல் கன்னெஞ்சுடையவர் அல்லர். இங்கிருந்து இவர் துணிந்து சென்றாலும் இரக்கத்தால் காரியசித்தி பெறாமல் திரும்பி வந்துவிடுவார். ஆகையால் நாமே செல்வோம்" என்று துணிந்து எழுந்தாள். தனது கையில் கட்டாரி ஒன்று தாங்கினாள்; சரேலென்று சென்று அரசன் படுக்கையை நெருங்கினாள். அங்கே படுத்திருந்த வேலைக்காரரிருவரும் தங்களை மறந்து தூங்கினார்கள். அவர்கள் அங்ஙனங் கிடக்கும்படி அவர்களை இவள் மதுபானத்தால் மயக்கியிருந்தாள். டங்கன் என்னும் இயற்பெயர் பூண்ட அரசனும், பிரயாண இளைப்பால் பெருந்தூக்கம் தூங்கிக் கிடந்தான். அவனைக் கண்கொட்டாமற் கவனித்துப் பார்த்த மக்பெத் பெருமாட்டிக்குத் தனது தகப்பன் ஞாபகம் வந்துவிட்டது. டங்கன் திருமுகம், தனது தந்தையின் திருமுகம்போல் அவளுக்குத் தோன்றிற்று. ஆகையால், அதற்குமேல் ஒன்றுஞ் செய்ய அவளுக்கு மனம் துணியவில்லை.

அங்கிருந்து அவள் திரும்பிவந்து புருஷனோடு கலந்து பேசினாள். அவனுடைய தீர்மானம் திகைத்தது; அவன் அவளை நோக்கி, "காதலீ! இந்தக் கொடுந்தொழிலை நான் எங்ஙனம் செய்யலாம்? எங்காவது உண்டா! அரசர் உப்பை உண்டு அவருக்கு நான் இப்படிப்பட்ட உயிர்த்துரோகம் செய்யலாமா! சாமித்துரோகம் யார்க்கு அடுக்கும்? எனக்கு அவர் எஜமானர் என்பது ஒன்றுமட்டுமா!

நெருங்கின சுற்றத்தார் ஆயிற்றே! என்னை நம்பியல்லவோ, இந்த வீட்டுக்கு விருந்தாளியாய் வந்திருக்கின்றார் அவர்? விருந்தாளியாய் வந்தவர்க்கு நான் கொலையாளி யாகலாமா? நமது அடைக்கலத்தில் இருப்பவர்கள் யாராயிருந்தாலும் அவர்களைக் காக்கவேண்டுமென்று தர்மசாஸ்திரம் இருக்கின்றதே! அவர்களை வேறொருவர் கொல்ல வந்தாலும் விலக்கவேண்டும் என்று விவேகம் தெரிவிக்கின்றதே! நான் என்ன செய்வேன்; எனக்கொன்றுந் தோன்றவில்லையே! நானே கத்தியைக் கையில் எங்ஙனம் ஏந்திச் செல்வேன்? நங்காய்! சற்றே நிதானி. நமது அரசர் எத்தனை இரக்கமுள்ளவர் என்பதை எண்ணிப்பார். ஆ, அவர் எவ்வளவு நீதிமான்! மன்னுயிரைத் தன்னுயிர்போல் மதிக்கும் மாண்புடையவரன்றோ அவர்! அவரையா நாம் கொல்வது? என்னைப் போன்ற உத்தியோகஸ்தர்களிடத்தில் எத்தனை உள்ளன்புடையவர்! அவரையா நாம் வெட்டுவது? என் விஷயத்தில் எத்தனை கிருபை உடையவர்! அவரையா நான் குத்துவது? பலே பேஷ்! நன்றாய்ச் சொல்கிறாயே! நான் அங்ஙனம் துணிந்து செய்தாலும் என்னைக் கடவுள் சும்மா விடுவாரா? இப்படிப்பட்ட நீதியரசர்கள் கடவுளின் அமிசாவதார சொரூபிகள் அல்லவா! இப்படிப்பட்டவர்களைக் கொன்றவர்களைக் குடிகளே பழிக்குப் பழிவாங்கிக் கொன்று போடுவார்களே! என்னை எல்லாரும் மதித்திருக்கின்றார்களே! 'இவனுக்கென்ன குறைச்சல்! அரசன் தயவைப் பூரணமாய்ப் பெற்றிருக்கின்றான். இவன் இட்டது சட்டம்-மக்பெத்தே அரசன்-அரசனே மக்பெத்' என்று எண்ணிப் பெருமையாய்ப் பேசிக்கொள்ளுகின்றார்களே! இந்த அருமையையும் பெருமையையும் அரைக்கணத்தில் இழக்க வேண்டுமா! அதுவும் இப்பேர்ப்பட்ட படுகொலையால் பாழாய்ப் போகவேண்டுமா!" என்று நியாயம் பேசினான்.

அது கேட்ட மனைவி மனந்திடுக்கிட்டு, "ஓ! ஓ! காரியம் மிஞ்சிப்போய் விடும்போல் இருக்கிறதே! இவர் நியாயம் பேசுகிறாரே! நியாயம் பேசினால் அதிகாரம் வருமா! இவர் பேசுகிற பிடிவாதத்தைப் பார்த்தால், அப்பால் எடுத்தடிவைக்க மாட்டார்போல் இருக்கிறதே!" என்று எண்ணிக் கொண்டாள். அவள் அதிக பிடிவாதமுள்ள கொடும்பாவி ஆகையால், தன்னைப்போலவே தனது கணவனையும் செய்ய எண்ணி, 'தையல் சொற்கேளேல்' என்றிருந்த புத்தி மாறுகிய அவனுடைய செவித் தொளைகளில் விஷமூற்றுவதுபோல அநேக போலி நியாயங்களைப் புகட்டினாள்; "ஏ நாதா! ஏனோ தாங்கள், இப்படி அஞ்சித் தவிக்கிறீர்கள்? ஒரே பிடிவாதமாய்க் காரியத்தைக் கெடுக்கின்றீர்கள்? எவ்வளவு சுலபம்! இவ்வளவு இலேசாய்க் காரி

யும் முடிய இருக்கையில் அதைப்பற்றி விடிய விடிய யோசித்துக் காலம் போக்குவானேன்? கைக்கெட்டினதை வாய்க்கெட்ட விடத் தாமதிக்கலாமா? எத்தனை சீக்கிரத்தில் முடித்து விடலாம்! ஓர் இராத்திரியிற் செய்த காரியம் எத்தனை இராத்திரியும் பகலும் இன்பங் கொடுக்கும் தெரியுமா? இன்பமென்றால் சாதாரண இன்பமா! அரச இன்பம் அல்லவா? அதிகாரமே நம்மதாய் விடாதா? ஆஹா! நாயகா! ஏனோ இப்படிப் பின்வாங்குகின்றீர்? வீராதி வீரரல்லவா நீர்! தீராதி தீரராயிருந்த உமக்கும் இத்தனை பயம் புகுந்து கொள்ளுமா! சூராதி சூரராய்ப் பகைவரைக் கொன்று வென்று வந்த நீர் இப்படி அஞ்சி நடுங்குதல் நன்று, நன்று! உம்மை விடப் பெண்பாலாகிய நானே தைரியசாலி என்று எண்ணுகின்றேன்! முன்வைத்த காலைப் பின் வைக்கலாமா? நானாயிருந்தால், இப்படி அஞ்சுவேனா? ஒரு காரியத்தைச் செய்ய ஒப்பிப் பிறகு தப்புவேனா? எனது பாலைக் குடித்து எனது மடியிலிருந்து எனது முகத்தை நோக்கிச் சிரித்துக்கொண்டிருக்கும் குழந்தையை யானாலும் சரி,-நான் மட்டும் கொல்ல ஒப்பியிருந்தேனானால், அதை உடனே எனது மடியிலிருந்து வீசி அறைந்து அதனுடைய மண்டையைச் சுக்கல் சுக்கலாய் உடைத்தெறிந்திருக்க மாட்டேனா! உம்மைப் போலவா, நான் சத்தியந் தவறுவேன்! எவ்வளவு இசைவாய்க் காரியத்தை யார்க்குந் தெரியாமல் முடித்துவிடலாம்! ஐயையோ வீணாய்ச் சமயம் தப்பிப் போகின்றதே! காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டுமே! இப்போதே நீர் சென்று காரியத்தை முடித்தால், பழியை, அங்கே படுத்திருக்கும் வேலைக்காரர்மேல் சுமத்தி விடலாமே! அவர்கள் சுய அறிவில்லாமல், குடிவெறியால் தம்மை மறந்து தூங்குகின்றார்களே! இதுதான் சமயம், போம் ஐயா, சீக்கிரத்தில் போம்! தாழ்க்கவேண்டா" என்று தனது மாய்மால வசனங்களால் அவனைத் தன்வசப்படுத்தினாள். அவனும் அப்படியே நீர்வழிப்பட்ட மிதவையைபோல் பெண்வழிப்பட்டுத் தனது பிடிவாதகுணத்தை மாற்றினான். அவளுடைய வார்த்தைகளாகிய காற்று, அவனுடைய தைரிய நெருப்பைமூட்டி எரியவைத்தது. அதனால் அவன், "சரி. நமது மனைவிசொல்வது சரிதான். ஏனோ நாம் அஞ்சவேண்டும்? வலியவந்த சீதேவியைக் காலால் உதைத்தபடி இந்தச் சமயத்தைக் கைசோரவிடப்படாது. ஒருகை பார்த்தே தீருவோம். எத்தனையோ யுத்தங்களில் எத்தனையோ உயிர்க்கொலை செய்த நாம் இந்த ஒரு கொலைக்கா அஞ்சலாம்," என்று தன்னைத் தானே தேற்றிக்கொண்டு எப்போதும்போலத் தைரியசாலியாய்ப் படுகொலைக்குத் துணிந்துவிட்டான்.

அதற்காக அவன், கட்டாரியைக் கையில் தாங்கினபடியே, யார்க்குந் தெரியாமல் இருட்டில் நுழைந்து டங்கன் அரசனுடைய

பள்ளியறைக்குப் போய்க்கொண்டிருந்தான். அவன் போகும்போதே, அவனுக்கு என்னென்னவோ தோன்றின. வேறே கட்டாரி ஒன்று ஆகாசத்தில் தொங்குவதாக எண்ணிக்கொண்டான். அதனுடைய பிடி இவன்பக்கம் திரும்பியிருந்தது. அதன் நுனியிலும் வாயிலும் இருந்து ரத்தம் சொட்டிக்கொண்டே இருந்தது. அதை இவன் பிடிக்கப்போனபோது, அது மாயமாய் மறைந்தது. இவன் கைக்கு ஒன்றும் அகப்படவே இல்லை. இது இவனுடைய மனமயக்கம். இவனுடைய மனதிலிருந்து கிளம்பின பிராந்தி. படுகொலைசெய்வோர்கள் சகஜமாய்க் காணுங்காட்சி இதுதான். அவர்கள் செய்யும் கொடுஞ் செய்கையால் மூளைக்குச் சூடேறி இப்படிப்பட்ட மாயத்தோற்றங்கள் தோன்றுவது சாதாரணம்.

இதற்கும் சிறிதும் அஞ்சாது அவன், அரசனறைக்குட் பிரவேசித்து, அவனை ஒரே வெட்டில் எமபுரம் அனுப்பிவிட்டான். இவன் இந்தக் கொலைசெய்ததுதான் தாமதம், அங்கேபடுத்திருந்த வேலையாட்களில் ஒருவன் தூக்கத்திலேயே நகைத்தான். மற்றவன், "ஓஹோ ஓஹோ! கொலை, கொலை !" என்று கூக்குரலிட்டான். இதனால் இருவரும் விழித்துக்கொண்டு, கனவின் பயநிவர்த்திக்காகக் கடவுளைத் தோத்திரஞ் செய்தார்கள். 'ஐயனே ! எங்களைக் காப்பாற்றும்' என்றான் ஒருவன். 'அப்படியே ஆகுக' என்றான் மற்றவன். இருவரும் எப்போதும்போலத் தூங்கிவிட்டார்கள். இவர்களைக் கவனித்து நின்றுகொண்டிருந்த மக்பெத்துக்கும் கடவுள் ஞாபகம் வந்துவிட்டது. அவனும் அவரைத் தோத்திரஞ்செய்து மன்னிப்புக் கேட்க முயன்றான். 'ஐயனே !' என்று வாயெடுக்கப் பார்க்கிறான். முடியவில்லை. அவனுடைய நாக்குப்போய் அண்ணத்தில் ஒட்டிக் கொள்ளுகிறது. கொலைபாதக மகத்துவத்தால் அதனை உச்சரிக்க அவனால் ஆகவில்லை.

ஆகாயத்திலிருந்து அவனுக்கொரு சத்தங் கேட்கிறதுபோல் இருக்கிறது.

'மகபதி ! மகபதி ! மாபா தகஞ்செய்
மகபதி உனக்குத் தூக்கம் மாண்டது ;
துக்கம் நீண்டது ; துயரஞ் சிறந்தது ;
துன்பம் பிடித்தது ; தூக்கம் இறந்தது ;
இனியுந் தூக்கம் எப்படிப் பிடிக்கும் ?
இன்பம் எப்படி எய்தும் உனக்கு ?
துன்பம் எப்படித் தொலையும் உனக்கு ?
வாழ்வுனக் கெப்படி வந்து சேரும் ?
தாழ்வே உனது தலையில் எழுத்தாம் ;

ஓ, ஓ! மகபதீ! உயிர்க்கொலை செய்த
உன்னைப் பாதகம் ஓயாது பற்றும்;
பற்றும் பற்றும் பஞ்சில் நெருப்புபோல்;
எங்குநீ போகினும் அங்கெலாந் தொடரும்;
மகபதீ! மகபதீ! மாபா தகஞ்செய்
மகபதீ! உனக்குத் தூக்கம் மாண்டது'

என்று அந்தச் சத்தம் எல்லார்க்குங் கேட்கும்படி ஆகாயவாணி பேசினதுபோல் மக்பெத்துக்குக் கேட்டது.

இப்படிப்பட்ட அகோர சிந்தனையோடு மக்பெத், தனது மனைவியிடத்திற்குத் திரும்பிப்போனான். அவன் வருவதற்குள் அவள், 'ஓ, ஹோ! அவர், காரியத்தை முடிக்காமலே திரும்பி வந்து விடுவார்போல் இருக்கின்றது! முடித்திருந்தால், இத்தனை நேரம் திரும்பி வந்திருக்கமாட்டாரா! அவரே முன்பின் யோசித்து விழித்துக்கொண்டிருக்கின்றாரோ! அல்லது, வேறு யாராலாவது தடை நேரிட்டதோ!' என்று எண்ணமிட்டுக்கொண்டிருந்தாள். இவனும் அவளை நெருங்கினான். இவன் கையிற் கட்டாரியைக் கண்டவுடனே அவள், உண்மை தெரிந்துகொண்டாள்; ஆகையால் இவனை நோக்கி, "என்ன இப்படி முகமாறி யிருக்கின்றீரே! உமக்கென்ன பயித்தியமா? அப்படி என்ன பிரமாதம் பண்ணிவிட்டீர்! நான் சொன்னபடிதான் செய்துவந்தீர். உமக்கு நன்மை தேடிக்கொண்டீரே தவிர, கெடுதியா தேடிக்கொண்டீர்? இப்படியும் உமக்குப் புத்தி சபலமாகுமா? ஆஹா! ஆண்பிள்ளை யல்லவா, நீர்? இப்படியும், வீரமற்ற வீண்பிள்ளைகளைப்போல வீண்பயித்தியம் பிடித்து விவேகம் இழந்து நிற்பீரா! தைரியமாய் இரும். ஒரே பிடிவாதமாய் இன்னும் ஆகவேண்டிய காரியங்களை நிறைவேற்றும். உடனே போய் உமது கைகளை அலம்பிக்கொள்ளும். யாராவது ரத்தத்தைப் பார்த்துவிடப்போகிறார்கள்" என்று சொல்லிக்கொண்டே, அவன் கையிலிருந்த கட்டாரியை வெகு சாக்கிரதையாய் வாங்கிக்கொண்டாள்; அதனில் ஒட்டிக்கொண்டிருந்த ரத்தத்தைக் கொண்டுபோய் அரசன் அறையில் படுத்துக்கொண்டிருந்த வேலைக்காரர்களுடைய மூஞ்சிகளில் தடவிவிட்டுச் சந்தடிபண்ணாமல் வந்துவிட்டாள். இப்படி அவள் செய்ததனால் வேலைக்காரர்கள்மேல் கொலைக்குற்றம் சாரவேண்டும் என்பது அவளுடைய தீர்மானம்.

பொழுது விடிந்தது. கொலையும் வெளியாயிற்று. அதை மறைத்துவைக்க முடியுமா? மக்பெத்தும் மனைவியும்கூட வாடின முகத்தோடு விசனங்காட்டினார்கள். வேலைக்காரர்களுடைய முகமும் கட்டாரியும் அவர்களைக் குற்றவாளிகள் ஆக்கின. ஆனாலும், அநு

மானம் மக்பெத்மேலேயே நின்றது. கண்டார் அனைவரும், "ஐயோ, பாவம்! இந்த வேலைக்காரர்கள் என்ன பலனைப் பெறும்படி அரசனைக் கொன்றிருப்பார்கள்! இல்லை, இல்லை! இந்த மக்பெத்தே கொன்றவன். இவன் அரசாட்சியை விரும்பி அங்ஙனம் செய்திருப்பான்" என்று பேசிக்கொண்டார்கள். டங்கன் அரச குமாரர்கள் இருவரும் ஓட்டம் பிடித்தார்கள். மூத்தவனாகிய மால்கம் (Malcolm) அங்கில அரசனை அடைக்கலம் அடைந்தான். இளையவனாகிய டனால்பின் (Donalbain) அயர்லாந்தைச் (Ireland) சேர்ந்தான்.

இப்படிப் பட்டத்துக்கு வரவேண்டிய இளவரசர்கள் ஓட்டம் பிடித்ததனால், மக்பெத்தே மகுடஞ் சூட்டிக்கொண்டு அரசனானான். இதனால், மாயப் பிசாசப்பெண்களின் ஆரூடம் தப்பாமற் பலித்தது காண்க.

இத்தனை உயர்பதவியடையப் பெற்றும், மக்பெத்தும் மனைவியும் மாயப்பிசாசங்களின் ஆரூடத்தை மறக்கவில்லை. இவர்கள் இருவரும், "அரச பதவியைப் பெற்றும் என்ன! நமக்கு ஆபத்து இருக்கவே இருக்கின்றது! மாயப்பிசாசங்கள் சொன்னபடி நமக்குப் பிறகு நமது பிள்ளைகள் பட்டத்துக்கு வரப்போகிறதில்லையே! பாங்கோவின் பிள்ளைகள் தாமே வரப்போகிறார்கள்! அதனால் நமக்கென்ன சுகிர்தம்? இதற்காகவா, இத்தனை கஷ்டப்பட்டுப் படுகொலை செய்தோம்? இன்னொருவன் பிள்ளைகள் ஆளுவதற்காகவா, இத்தனை பெரிய காரியத்தைத் தைரியமாகச் செய்து முடித்தோம்! இதைப் பற்றிக் கவனிக்காமல், நாம் சும்மா இருந்துவிடக்கூடாது. எப்படியாவது பாங்கோவையும் அவனுடைய மகனையும் கொன்றுவிடவேண்டும். அப்பேர்ப்பட்ட அரசனையே கொன்றுவிட்ட நமக்கு இந்தக் காரியம் வரவா, செலவா? மாயப்பிசாசங்களின் ஆரூடத்தைப் பொய்யாக்கி விடவேண்டாமா? அது வல்லவோ, நமது புத்தியின் சக்தி! தேகபலம் இருந்தென்னத்திற்கு? புத்திபலம் அல்லவோ, பெரிது? மாயப்பிசாசங்களின் ஆரூடம் நமக்குப் பலித்ததென்றால், அது பிறர்க்கும் பலிக்கவேண்டுமோ! அப்படி அது பலிக்க, நாம் பார்த்திருப்பது மடமையாகும்" என்று எண்ணிக்கொண்டார்கள்.

இதற்காக அவர்கள் ஒரு பெருவிருந்து ஏற்படுத்திப் பிரபுக்களையெல்லாம் வரவழைத்தார்கள்; இவர்களுக்கிடையில் பாங்கோவையும் மகனையும் அதிக அக்கரையாய் எதிர்பார்ப்பதாக மரியாதையோடு தெரிவித்தார்கள். விருந்திடுங்காலம் இராக்காலமாயிருந்தது. பாங்கோவும் மகனும் அரசமாளிகைக்கு வரும் வழியில் கொலையாளிகள் பதுங்கியிருந்து, அரசன் கட்டளைப்படி பாங்கோவைக் குத்திக் கொன்றார்கள். அந்த அரவத்தால் அவன் மகன், ப்ளீன்ஸ் (Fleance)

என்பவன் தப்பிப் பிழைத்தோடிப்போய் விட்டான். மாயப்பிசாசங்கள் சொன்னபடி, இந்த ப்ளீன்ஸ் என்பவனுடைய சந்ததியார்கள் தாம் அதன் பிறகு ஸ்காட்லாண்ட் அரசர் ஆனார்கள். அவர்களிற் கடைசியரசனான ஜேம்ஸ் (James) ஆறுவன்தான், இங்கிலாந்தில் ஜேம்ஸ் முதலாவன் என்னும் அரசனாய் இருதேசங்களையும் ஏகசக்ராதி பத்யத்திற்குள்ளாக்கி அரசுபுரிந்தான். விருந்து நடந்த காலத்தில், ராஜாத்தியின் நடத்தை நாகரிகமாய் கம்பீரமாய், எல்லார் மேலும் ஒரேவிதமான கவனமுள்ளதாய் இருந்தது. ஆகையால் அங்கு வந்திருந்தார் அனைவரும் அகமகிழ்ந்து முகமலர்ந்திருந்தார்கள். மக்பெத்தும் எல்லாரிடத்திலும் சமமான அன்போடு கவனஞ்செலுத்தி வார்த்தை சொன்னான்; "ஐயன்மீர்! நீங்கள் எல்லாரும் எனது கூரையின்கீழ் விஜயஞ்செய்து வீற்றிருந்து என்னைக் கௌரவப் படுத்தினதற்காக நான் மிகவும் கடமைப் பட்டிருக்கின்றேன். ஆனால், தற்சமயம் இங்கே பாங்கோவும் வந்திருந்து என்னைக் கௌரவப்படுத்தாததற்காக எனது மனது வருந்துகின்றது! எனக்கவன் உகந்த நண்பனாயிருந்தும், என்னை இப்படி அவமதித்தான் அல்லவா!" என்று சொல்லிப் பெருமூச்சுவிட்டான்.

அவன் அந்த மூச்சைவிட்டு, உள்ளே வாங்குமுந்தியே, கொலையுண்ட பாங்கோவின் ஆவி, ஆவென்று வாயைத்திறந்துகொண்டு விருந்தறைக்குள் நுழைந்தது. மக்பெத்தைவிடாமல் தொடர்ந்து, அவன் உட்காரும் நாற்காலியின்மேல் அவனுக்கு முந்திச்சென்று, தான் உட்கார்ந்துகொண்டது; மக்பெத் தைரியசாலிதான்; இப்படிப்பட்ட பேய்களை அஞ்சாமல் எதிர்க்கக்கூடியவன்தான். ஆனாலும் அப்போது அவனால் ஒன்றும் முடியவில்லை; பயத்தால் அவன் உடலெல்லாம் நடுங்கினான். அவனுடைய கன்னங்கள் வெள்ளைவெளேரென்று வெளுத்துப் போயின. சிறிதும் அசையாமல் அந்த ஆவியை உற்றுநோக்கினபடியே நின்றான். அவனுடைய மனைவியும் பிறரும் அங்கொன்றையுங் காணவில்லை; வெறும் நாற்காலியைக் கண்கொட்டாமல் உற்றுநோக்கும் மக்பெத்தைக் கவனித்துப் பார்த்தார்கள்; "இது என்ன இது! அதிசயமாயிருக்கின்றதே! அரைக்கணத்துக்கு முந்தி நன்றாய் வார்த்தை சொல்லிக்கொண்டிருந்த அரசன் உன்மத்தர்போல் விழிக்கின்றாரே!" என்று அதிசயித்தார்கள். அரசிமட்டும் அவனருகிற்சென்று இரகசியமாய் அவனை வெறுத்துக்கொள்ள ஆரம்பித்தாள்; "என்ன இது! இப்படி மதிமயங்கி நிற்கின்றீரே! முந்தி உமது கண்களுக்குத் தோன்றின மாயக்கட்டாரியை மறந்து விட்டீரோ! அதுபோலத்தான் இதுவும் இருக்கும்! தோற்றத்தைக் கண்டு மருளலாமோ? உமக்கு எந்நேரம் பார்த்தாலும்

இதுவே வழக்கமாய் விட்டது'' என்று தேற்றினாள். அவன் கொஞ்சங்கூடத் தேறவில்லை. யார் என்ன சொன்னாலும் இப்படி அப்படி திரும்பவில்லை; பார்த்தகண் பூத்துப்போம்படி ஆவியை விடாமல் உற்றுநோக்கினபடியே நின்றான். பித்தம் பிடித்தவன்போலப் பேச ஆரம்பித்தான். தன்னைமறந்து அவன் பேசின பேச்சுகளில் கொலை சம்பந்தமானவைகளும் கிளம்பின. அதைக்கேட்டாள் அவன் மனைவி; "இது என்ன இது ஆபத்தாயிருக்கின்றதே, இரகசியம் வெளியாய் விடுமே! அறையில் நடந்தது அம்பலம் ஏறிவிடுமே! எல்லாம் வெட்டவெளிச்சம் பட்டப்பகலாய்விட்டால், அப்பால் நாம் என்னசெய்யலாம்!'' என்று எண்ணிப்பயந்து அதிக அவசரமாய் விருந்தாளிகளுக்கு விடைகொடுத்து அனுப்பினபடியே, "ஐயன்மீர் என்னை மன்னிக்கக் கோருகிறேன். அடிக்கடி இப்படிப் புத்திமாறிப்போவது அரசர்க்கு வழக்கமாய்விட்டது. அது நீங்களெல்லோரும் அறிந்தது தானே!'' என்று சமாதானங் கூறினாள்.

இப்படி அடிக்கடி மக்பெத் பற்பல அகோரகாட்சிகளைக் கண்டு மருண்டபடியே இருந்தான். இவன் மட்டுமா! இவனுடைய மனைவியும் இவனைப்போலவே காணாத கனாக்களைக் கண்டு பயந்தாள். பாங்கோவைக் கொன்றபாதகம் அவர்களைப் பற்றி அலைக்கழித்தது. ப்ளீன்ஸ் தப்பிப் பிழைத்தோடியது அவர்களுக்குத் தீராத்துயரமாயிருந்தது. அவனைப்பற்றி அவர்கள் பலபல எண்ணி வாடினார்கள். "ஒஹோ, மாயப்பிசாசங்களின் ஆரூடம் தவறாமற் பலிக்கும்போல் இருக்கிறதே! ப்ளீன்ஸ் சந்ததியாரே பிரபலமாய் அரசாளப் போகிறார்கள். அவர்களே நமது சந்ததியார்க்கு நமன்களாய்க் கிளம்புவார்கள்! இதற்கு நாம் என்ன செய்வோம்'' என்று வருந்தி இரவும் பகலும் தூக்கம் இன்றி ஏக்கம் பெரிதாய் வாடினார்கள். மறுபடியும் மக்பெத் மாயப்பிசாசப் பெண்களைக் கண்டுபேசி இன்னும் தனக்கு என்னென்ன கேடுவருமோ என்கிற உண்மையைத் தெரிந்துகொள்ளத் தீர்மானித்தான்.

அதற்காக அவன், அவர்களைச் சம்பங்காட்டிலுள்ள குகையில் தேடிப்போனான். அங்கே இவன் வருவதைக்கண்ட அவர்கள் தமது பயங்கரமான வசிகரமருந்தை எண்ணெய்க் கொப்பரையில் ஆக்கிக் கொண்டிருந்தார்கள். இதனால் பாதாளப் பேய்கள் வசியமாய், இனி வருங் காரியத்தை இவர்களுக்கு அறிவிப்பது வழக்கம். அவர்களில் முதல் மாயப் பிசாசப்பெண் "அடடாடா! இது என்ன இது! இந்த வரிப்பூனை இப்படிச் சட்டதிட்டமாய் மும்முறை கூவிற்றே!'' என்றாள். இரண்டாம் மாயப்பெண் "பல்லி பளிச் பளிச்சென்று ஒன்பது சொல்லிற்றே!'' என்றாள். மூன்றாம் மாயப்பெண், "குட்டி

ஆந்தை கன்னங்கரேறென்று கிளைகூட்டிக் கத்துகின்றது. ஆச்சு, சமயம் நெருங்கிற்று !'' என்றாள். மறுபடியும் முதல் மாயப்பெண்,

‘ கொப்பரையைச் சுற்றிக் கூட்டமாய்ச் செல்லுவோம்
வாருங்கள் ! வாருங்கள் ! அனைவரும் வாருங்கள் !
கொப்பரைக் குள்ளே கொடுவிட மூட்டிய
குடல்களைப் போடுவோம் கூட்டமாய்ப் பாடுவோம்
ஓடுவோம் ; குதிப்போம் ; ஆடுவோம் ; அந்தக்
கருங்கல் லுக்குள் கங்குலும் பகலும்
முப்பத் தொருநாள் முடங்கிக் கிடந்து
நன்றாய்த் தூங்கி நஞ்சம் ஏறிய
தேரைக் குட்டியே சீக்கிரம் வேகுவாய் !
முதலில் நீதான் பதமாய் இந்தக்
கொப்பரைக் குள்ளே கொதித்து வேகுகவே’

என்றாள். அவள் சொல்லி முடித்தவுடனே மூவரும் ஒன்றுசேர்ந்து,

‘ கஷ்டம் கஷ்டம் இரட்டைக் கஷ்டம்
கொப்பரை கொதிக்க! கொடுவிடம் உதிக்க!
எண்ணெய் காய! நெருப்பும் எரிகவே!’

என்றார்கள். மறுபடியும் இரண்டாம் மாயப்பெண்,

‘ பாம்புபோற் புரளும் பாம்பின் கறியே
கொப்பரைக்குள்ளே எண்ணெயிற் கொதித்துப்
பதமாய் வெந்து பக்குவ மாவாய்!
பல்லிக் கண்ணே பாகமாய் வேகுக!
தவளையின் விரலே சமையல் ஆகுக!
வவ்வால் தோலே வயணமாய் வேகு!
நாயின் நாவே நன்றாய் வேகு!
நாகப் பல்லே நயமாய் வேகு!
குளவியின் கொடுக்கே இளகலாய் வேகு!
ஓந்திக் காலே உடனே வேகு!
ஆந்தைச் சிறகே காந்திக் கெடாதே!
நீங்க ளெல்லாம் நெருப்புமேல் இந்தக்
கொப்பரை யெண்ணெயில் கூட்டமாய் வேகும்!
மந்திரக் காளி மாயக் காளி
மாய மந்திரம் காியமா யிப்போ
பலிக்க வேண்டும் பகவதி மந்திரம்
வசிய மந்திரம் வாய்க்க வேண்டும்

ஆகையால் நீங்கள் அனைவரும்
பதமாய் வெந்து பாக மாகுகவே'

என்றாள். உடனே மூவரும் ஒன்று சேர்ந்து,

'கஷ்டம் கஷ்டம் இரட்டைக் கஷ்டம்
கொப்பரை கொதிக்க! கொடுவிடம் உதிக்க!
எண்ணெய் காய நெருப்பும் எரிகவே!'

என்றார்கள். மறுபடியும் மூன்றாம் மாயப்பெண்,

'பறவை நாகப் பாம்பின் முதுகிற்
செதிளே சீக்கிரம் பதமாய் வேகு!
கோணாய்ப் பல்லே தானாய் வேகு!
சுறாவின் வயிறே சொகுசாய் வேகு!
மந்திர வாதியின் மாயப் பல்லே
தந்திர மாகச் சமையல் ஆகுக!
இருட்டில் தோண்டிய இரும்பிலிக் கிழங்கே
குருட்டுத் தனமாய்க் குருவைப் பழிக்கும்
ஈனன் வயிற்றில் எடுத்த ஈரலே
சந்திர கிரகணந் தன்னில் தோண்டி
மந்திரம்போட்டுத் தந்திரமாகப்
பிடுங்கி யெடுத்த பேய்துடரி வேரே
ஆட்டுக் கடாவின் அதரே ஈரலே
துருக்கன் மூக்கே சோனகன் உதடே
தலைச்சன் பிள்ளைத் தலையின் ஓடே
நீங்க ளெல்லாம் நெருப்பில் இந்தக்
கொப்பரைக் குள்ளே குழம்பி ஒன்றாய்க்
கஞ்சிபோல் ஆகுக! கடும்புலிக் குடலைக்
கூட்டி யெடுத்துக் கொள்ளுவோம் யாமே.'

என்றாள். மூவரும் ஒன்று சேர்ந்து

'கஷ்டம் கஷ்டம் இரட்டைக் கஷ்டம்
கொப்பரை கொதிக்க! கொடுவிடம் உதிக்க!
எண்ணெய் காய நெருப்பும் எரிகவே!'

என்றார்கள். மறுபடியும் இரண்டாம் மாயப்பெண் 'இந்தக் கொப்பரைக்கருவில் குரங்கின் ரத்தத்தையுங் கூட்டிக்கொண்டால் மந்திரம் நன்றாய்ப் பலிக்கும்' என்றாள். இத்தனைவைபத்தோடு இந்தமாயப்

பிசாசப் பெண்கள் ஆக்கின வசிகர மருந்துக்குப் பாதாளப் பேய்கள் கட்டுப்பட்டு, இவர்கள் கேட்குங் கேள்விகளுக்கு விடைகூறுவது வழக்கம்.

மக்பெத், சமீபத்தில் வந்தவுடனே, அந்த மாயப் பெண்கள் அவனை நோக்கி, "ஏ, மகபதீ! உனது சந்தேகத்தை நாங்களே தீர்க்கலாமா? அல்லது எங்களுக்குத் தலைவர்களாகிய மாயாவிகளே தீர்க்க வேண்டுமோ?" என்று உரத்துக் கேட்டார்கள். அது கேட்ட மக்பெத் சிறிதும் அஞ்சவில்லை. அந்தக் கொப்பரையின் கோரக்காட்சியை மதிக்கவேயில்லை; "எங்கே இவர்கள்? இவர்களை எனக்குக் காட்டுங்கள்" என்று தைரியமாய்க் கேட்டான். அப்படியே அந்த மாயப் பெண்கள் மாயாவிகளை வரவழைத்தார்கள். அவர்களும் மூவர்கள். அவர்களில் முதல் மாயாவி கவச மணிந்த தலையுருவாகத்தோன்றி, "ஏ, மகபதீ! பைப் (Fife) பிரபுவைப்பற்றி எச்சரிக்கையாயிரு" என்று சொன்னான். அது கேட்டவுடனே மக்பெத் அவனுக்கு வந்தனஞ் செய்தான். மக்பெத்துக்கும் மக்டப் (Macduff) என்னும் பைப் (Fife) பிரவிவுக்கும் தீராப் பகையுண்டு.

இரண்டாம் மாயாவி, ரத்தம் பூசின குழந்தை உருவாகத் தோன்றி "ஏ, மகபதீ! அஞ்சாதே! எந்த மனிதனும் உன்னை வெல்ல மாட்டான். தாய் வயிற்றிற் பிறந்த எவனுக்கும் உன்னை வெல்லும் வல்லமை இராது. ஒரே பிடிவாதமாய் இரு. ரத்தஞ் சிந்தப் பின்னிடையாதே! தைரியத்தைவிடாதே!" என்று சொல்லி மறைந்து போய் விட்டான். "ஆனால் சரி - மக்டப்! நீ உயிரோடிரு. உன்னை ஒருகை பார்த்துக்கொள்ளுகிறேன். உனக்கு நான் பயப்பட நியாயம் இல்லை. எப்படியாவது உன்னைக் கொன்றுபோடுவேன். கொன்றே தீர்த்துவிடுவேன்! இது முக்காலும் சத்தியம். இனி நான் இடி இடித்தாலும் அஞ்சேன். உன்னைக் கருவறுத்தே விடுவேன்" என்று தைரியமாய்ச் சபதஞ் செய்தான் மக்பெத்.

இந்த மாயாவி மறைந்தவுடனே, மூன்றும் மாயாவி முடிதரித்துக் கையில் செடிபிடித்துக் குழந்தையுருவாகத் தோன்றி "ஏ, மகபதீ! மகபதீ! *மடங்கலைப்போல மனமடங்காமல் இரு. கலகக்காரர்களுக்கு அஞ்சாதே! பகைவர்களுக்குப் பயப்படாதே! ஒருவர் கோபமும் உன்னை ஒன்றுஞ் செய்யாது. ஆனால், ஒன்று: பர்னம் காடு, இடம் விட்டுப் பெயர்ந்து டன்ஸினேன்மலைக்கு உன்னை எதிர்த்து வருமட்டும் உனக்கு அழிவு கிடையாது. அஞ்சாதே!" என்றான். அதற்கு மக்பெத், "ஆனால் சரி - ரொம்பச் சரி. மெத்தச் சரியாய்ச் சொன்னாய். காட்டுச்செடிகளை வேரோடு இடம் விட்டுப் பெயர்த்தெடுத்துக்

* மடங்கல்=சிங்கம்.

கொண்டுவர யாரால் ஆகும்? அத்தனை வல்லமைசாலி எவன் இருக்கிறான்! உனது ஆரூடம் அதி திவ்யமாயிருக்கின்றது. எனக்குச் சாவே கிடையாது - அகால மரணத்துக்கு அஞ்சியிருந்தேன்! ஆனால், இப்போது நீ சொன்னபடி நான் முழு ஆயுளைப்பெற்று வாழ்வேன். எனக்குப் பூரணாயுசு என்பதற்குச் சந்தேகம் இல்லை - இனி நான் அச்சம் நீங்கினேன். ஆனாலும் இன்னும் ஒரு விஷயம் என்மனதில் அடித்துக்கொண்டிருக்கின்றது. அந்தச் சந்தேகந்தான் பெரிதாயிருக்கின்றது. அதைக்குறித்து ஏதாவது உன்னால் சொல்ல முடியுமா? பாங்கோ இருந்தானே, அவனுடைய சந்ததியார் யாராவது இந்த அரசாட்சியைப் பெற்று ஆளுவார்களா?'' என்று கேட்டான். உடனே அந்த மாயாவி பாதாளத்தில் ஒடுங்கிவிட்டான். வாத்திய கோஷம் கேட்டது. அரசர்களைப்போல எட்டு அருவிழல்கள், மக்பெத்துக் கெதிரிற் சென்றன. அவைகளிற் கடைசி விழல் பாங்கோவைப்போலத் தோன்றிக் கையிற் கண்ணாடி வைத்திருந்தது. அதற்குள் இன்னும் அநேக அரசர்களுடைய விழல்கள் தெரிந்தன. பாங்கோ உடம்பெல்லாம் ரத்தம் தோய்ந்து, மக்பெத்தைக்கண்டு புன்சிரிப்புக் கொண்டபடியே, அவர்களை அவனுக்குச் சுட்டிக்காட்டினான். அவர்களெல்லாம் பாங்கோவின்சந்ததியார்களென்றும் அவர்களே தனக்குப் பின்பு ஸ்காட்லந்தை ஆளுவார்களென்றும் மக்பெத் தெரிந்துகொண்டான். மாயப் பெண்கள் வாத்திய கோஷத்தோடு கூத்தாடிக்கொண்டே மக்பெத்துக்கு வந்தனந்தந்து மறைந்து போனார்கள். அது முதல் மக்பெத்தின் எண்ணமெல்லாம் பயங்கரமாகவும் ரத்தப்பிரிய மாகவுமே இருந்தது.

மாயப்பெண்களின் குகையைவிட்டு அப்பாற் சென்றவுடனே ஒரு தூதன் ஓடிவந்து மக்பெத்தைக் கண்டு, "ஐயனே மக்டப்பிரபு இங்கிலாந்துக்கு ஓடிப்போய்விட்டார். அங்கே மால்கம் இளவரசர் தங்களுக்கு விரோதமாகச் சேர்த்துக் கொண்டிருக்கும் சேனையோடு சேர்ந்துகொண்டார்'' என்றான். அங்கிலேயே சேனாவீரர்கள், மக்பெத்தை எப்படியாவது சிம்மாசனத்தினின்றும் நீக்கிவிட்டு மால்கம்முக்கு முடிசூட்டவேண்டுமென்று அதி உற்சாகமாயிருந்தார்கள். இந்த விஷயத்தைத் தெரிந்துகொண்டவுடனே மக்பெத்துக்கு அடங்காக் கோபம் மூண்டது. அதனால் அவன் உக்ராவேசத்தோடு மக்டப்பின் அரண்மனைக்கு ஓடி, அங்கிருந்த அவனுடைய பெண்டு பிள்ளைகளைக் கத்திக்கிரையாக்கி, அவர்களைச் சேர்ந்த மற்றச் சுற்றத்தார்களையும் சித்ரவதைசெய்து நாசமாக்கினான்.

இதனால் மக்பெத் விஷயத்தில் பிரபுக்களுக்கெல்லாம் அருவருப்புண்டாயிற்று. அவர்களில் அநேகர் கூடிப்போய் மால்கம் மக்டப் என்பவர்களோடு கூடிக்கொண்டு, அவர்கள் இருவரும் இங்கி

லந்திற் சேர்த்த பெருஞ்சேனையோடு மக்பெத்துக்கு விரோதமாக வந்துகொண்டிருந்தார்கள். ஸ்காட்லாந்தில் இருந்த மற்றப்பிரபுக்களும் மேலுக்கு மக்பெத்துக்கு பயந்தது போல நடித்தார்கள். ஆனாலும் அந்தரங்கத்தில் அவனை வெறுத்து "கடவுளே! மக்டப்பின் உதவியால் மால்கம்முக்கே ஜெயம் உண்டாக வேண்டும். அவனே முடிசூடி ஆளவேண்டும்" என்று கோரினார்கள். மக்பெத்தின் சேனைகள் சீக்கிரத்திற் சேரவில்லை. இவன் கொடுங்கோல் அரசனாகையால் எல்லாரும் இவனை வெறுத்தார்கள். 'கொடுங்கோல் அரசன் வாழு நாட்டிற் கடும்புலி வாழும் காடுநன்றே' என்று எண்ணிக்கொண்டிருந்தார்கள். ஒருவரும் அவனை விரும்பவில்லை. எல்லாரும் அவன் விஷயத்திற் சந்தேகப்பட்டார்கள். அவனுக்கே அவன் விஷயத்தில் வெறுப்புண்டாயிற்று. அவன் என்ன செய்வான் பாவம்!

'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்'

என்றபடி இடும்பையில் அவஸ்தைப்பட்டுத் தவிக்கிறான்; எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணுகிறான்; பண்ணாத யோசனைகள் பண்ணுகிறான். தான் கொன்ற டங்கன் அரசனுடைய நிலைமையே தொல்லையில்லாத நிலைமை என்று எண்ணுகிறான்; "ஏ, டங்கன் அரசே! தற்சமயம் உன்நிலையே நன்னிலை! அது எனக்கு இப்போது முன்னிலையில் தெரிகின்றது. நான் உன்னைக் கொன்றதனால் உனக்குத் தீங்காசெய்தேன்? இல்லை, இல்லை; நன்மைசெய்து உன்னை நன்றாய்த் தூங்கவைத்தேன். பாதாளப்படுக்கையில் நன்றாய்த் தூங்கிக்கொண்டிருக்கிறாயே! உன்விஷயத்தில் எனக்கிப்போது பொறாமையாயிருக்கின்றது! இனி உன்னை எதுதான் என்ன செய்யும்? ஆயுதம் பாயுமா? விஷங் கொல்லுமா? எதுவும் ஒன்றும்செய்யாது. உன் விஷயத்தில் இராஜ துரோகியாயிருந்த நான்தான் இங்கு அகப்பட்டுக்கொண்டு விழிக்கின்றேன்!" என்று எண்ணிப் பெருமூச்சுவிடுகிறான்.

இப்படி இங்கே நிகழ்ந்துகொண்டிருக்கையில் இவன் மனைவியாகிய இராணி இறந்தாள். இவள் இறந்ததற்குக் காரணம் விசாரிக்கையில் தற்கொலையென்று வெளியாயிற்று. இவள் தற்கொலை புரிந்ததற்குக்காரணம் இதனை வாசிப்போர்க்குச் சொல்லாமலே விளங்கும். மக்பெத் புரிந்த ராஜதுரோகப்படுகொலைக்குப் பங்காளியாயிருந்தவள் இவள் தானே! படுகொலைக்குப் பங்காளியாயிருந்த மக்பெத்தைத் தேற்றி அதைச்செய்யத் தூண்டினவள் இவள்தானே! அப்போப்பட்ட இவள் தற்கொலை புரிந்துகொண்டிராவிட்டால் இவளுடைய ஆத்மாவுக்குச் சுகமேது? ஐயோ பாவம்! இவள் இருந்ததனால், மக்பெத்

துக்கு அதிக ஆதரவாயிருந்தது. ஒவ்வொரு இரவிலும் அகோர கனவுகளைக்கண்டு அவன் பயந்தபோதெல்லாம் இவள் அவனுக்குத் தைரியஞ்சொல்லிக்கொண்டே வந்தாள். அப்பேர்ப்பட்ட ஆதரவா யிருந்த இவள் தன்னை எல்லாரும் வெறுத்தபடியால், தனது பாதகங் களைத் தானே பொறுக்கமாட்டாமல் தற்கொலைபுரிந்து மாண்டாள். மக்பெத்துக்கு இவள் தவிர வேறு யாரும் உற்றதுணை கிடையாது. இவள் மாண்டதனால் அவன் தன்னந்தனியனாய்த் தவித்தான். அவ னிடத்தில் அன்பு செலுத்துவார் யாருமில்லை. அவனுக்கு நம்பிக் கையானவர்களும் ஒருவரும் கிடையாது.

அவனுக்கு வாழ்நாளில் வெறுப்பு உண்டாகியது. சாவ விரும்பி னான்.

> 'பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
> பிற்பகல் தாமே வரும்'

எனவும் 'முற்பகல் செய்தால் பிற்பகல் விளையும்' எனவும் கூறப்பட்ட படி அப்போது அநியாயமாய் அரசனைக்கொன்ற இவனைக் கொல்ல எமன் நெருங்கி வந்துகொண்டிருந்தான். அரசகுமாரனாகிய மால்கம் மின் சேனை மகாட்டகாசமாய் வந்துகொண்டிருந்தது. அது தெரிந்த மக்பெத்துக்கு, அடங்கி இருந்த தைரியம் மூண்டெழுந்தது; அத னால் அவன், "ஆ! நானும் எனது மனைவியைப்போலவா சாவேன்? முதுகிற் கவசத்தோடே மாளுவேன்! எனது ரத்தஞ்சிந்தி எலும்பி லிருந்து சதைகள் வேறாகுமட்டும் சண்டைசெய்வேன். யாராயிருந் தாலும் எளிதில் விடமாட்டேன். மாயப்பெண்கள் எனக்குச் சொல்லி இல்லையா! 'மகபதி! நீ அரசனாவாய்' — என்றார்களே! மாயாவிகளும் சொல்லி இல்லையா! 'தாய்வயிற்றில் பிறந்தவன் எவனும் என்னைச் சண்டையில் வெல்லமாட்டான்' என்றார்களே! 'டன்ஸினேன் மலைக்கு, பர்னம் காடு அடியோடு பேர்ந்துவருமட்டும் உனக்கு அழி வில்லை' என்றார்களே! இது எங்கேனும் முடியுமா? காடு இடம் விட்டுப் பெயர்ந்து மலைக்குவருவது எங்கேனும் உண்டா?" என்று எண் ணிச் சண்டைக்கு ஆயத்தமாயிருந்தான். ஆகையால், அவன் தனது அரண்மனையை விட்டு வெளிப்படவில்லை. அதற்குள்ளேயே சர்வ ஜாக்கிரதையாய்ப் பகைவரை எதிர்நோக்கியிருந்தான். அவன் இருந்த அரண்மனையை முற்றுகை போட்டுப் பிடிப்பதென்றால், சாதாரண காரியமன்று. அது அத்தனை வசதியாய் உறுதியாய் எப்பேர்ப்பட்ட முற்றுகைக்கும் ஈடுகொடுத்து அழியாமல் விளங்கக்கூடியது. 'மால் கம் எப்போது வருவான் வருவான்' என்று எதிர்பார்த்துக்கொண் டிருந்தான் மக்பெத். கடைசியாக ஒருநாள் தூதன் ஒருவன் ஓடி வந்து முகம் வெளுத்து அகம் நடுங்கி மக்பெத்தைக்கண்டு வணங்கி,

"ஐயனே! நான் கண்டு வந்ததைச் சொல்ல எனக்கு வாய் வரவில்லை. நான் என்னவென்று சொல்வேன்!" என்று அஞ்சிப் பயந்து நின்றான். அதுகண்ட மக்பெத், "என்னடா அது! இப்படி நடுங்கு கின்றாய் கண்டதைச் சொல்லடா அண்டப் புளுகா!" என்று உறுத்துக்கேட்டான். அதற்கு அஞ்சி வணங்கின அவன், "ஐயனே! மலைமேலே நான் காவல்புரிந்து நிற்கையில் பர்னம் காட்டை உற்று நோக்கினேன். இருந்தாற்போலிருந்து அது நகர ஆரம்பித்தது" என்றான். அதுகேட்ட மக்பெத், "அடே பச்சைப்புளுகா! பரமசண்டாளா! அப்பாலே போடா மூடா! நீ பேசுவது பொய்யானால், உன்னைத் தூக்கிப் போடுவேனடா! உன்னைக் காகமுங் கழுகும் பிடுங்கும். நீ சொல்வது நிஜமானால் அதைப்பற்றி எனக்கு அவசியமில்லை. நீ உன் இஷ்டம்போற் போகலாம்." என்று அவனைப் பழித்துப்பேசினான். மக்பெத்துக்கு வரவர மாயாவிகளின் வார்த்தைகளில் நம்பிக்கை குறைந்தது. அவைகள் சொன்னது இருபொருள் படும்படியாய் இருந்தமையால் அவனுக்குத் தைரியம் குறைந்தது. ஆகையால் அவன், "என்ன இது! அதிசயமாயிருக்கின்றதே! பர்னம் காடு டன்ஸினேன் மலைப்பிரதேசமாகிய இங்கு வருமட்டும் பயமில்லை என்றிருந்தோமே! காடு இடம்விட்டுப்பெயர்தல் அசாத்தியம் என்று எண்ணி இருந்தோமே! இப்போது இந்தத் தூதன் சொன்னபடி அது இடம்விட்டுப் பெயர்ந்து வருகிறதென்றால் அப்பால் நமக்கென்ன இருக்கின்றது? இங்கிருந்து புறப்படவேண்டியதுதான். கவசம்முதலியவைகளைப் பூண்டு போர்க்கு ஆயத்தமாக வேண்டியது தான். இங்கிருந்து வேறெங்கேயாவது ஓடிப்போய்விடலாமா? அது யார் செய்கிற காரியம்? நம்மைப்போல வீரனா அப்படிச் செய்வான்? காடே இடம்விட்டுப் பெயர்ந்துவருகிறதென்றால் அதிசயந்தானே! அதைக் கேட்டபிறகும் நாம் உள்ளே இருக்கலாமா? மேலும் வாழ்நாளில் நமக்கு அருவருப்புண்டாயிருக்கின்றது. என்றைக்கிருந்தாலும் சாவவேண்டியது உண்மைதானே! நமது வாழ்நாள் இன்றைக்கே அழியட்டுமே!" என்று வீரம்பேசிக்கொண்டே அரண்மனையிலிருந்து வெளிப்பட்டுப் பகைவரை நோக்கி ஓடினான். முற்றுகை போடவந்த பகைவரும் அரண்மனையை நெருங்கினார்கள்.

காடு நகருவதுபோன்ற அதிசயத் தோற்றத்தைத் தூதன் கண்டதற்குக் காரணம் வெகு சுலபம். முற்றுகைபோடவந்த மால்கம் சேனை பர்னம்காட்டுவழியாய் வந்துகொண்டிருக்கையில், மால்கம் அவர்களை நோக்கி, "வீரர்காள்! நீங்கள் ஆளுக்கொன்றாய் இந்தக் காட்டு மரக்கிளைகளைத் தறித்தெடுத்துக் கையிற்பிடித்துக்கொண்டு நடவுங்கள். அப்போதுதான் நமது சேனையின் அளவு எதிரிகண்ணுக்கு மறைவாயிருக்கும்' என்று கட்டளையிட்டிருந்தான். அப்படியே அவர்கள்

செய்து மரக்கிளைகளோடு நடந்து வந்துகொண்டிருந்தார்கள். அந்தக் காட்சியாலேயே தூதன் மருண்டுவெந்து, காடு நகருகிறதென்று சொன்னான். இதனால் மாயாவியின் ஆரூடம் பலித்தது காண்க. மக்பெத் எண்ணியிருந்தபடி காடே அடியோடுபேர்ந்து வராவிட்டாலும் அதைப்போன்ற மரக்கிளைக் காட்சியாவது, அது வருவது போலவே தோன்றிற்றல்லவா? மக்பெத்தின் நம்பிக்கைகளில் ஒன்று நாசமாய்ப்போயிற்று.

இருதிறத்தார்க்கும் பலமான சண்டை நடந்தது. மக்பெத்துக்குச் சேனாபலம் இருந்ததென்றாலும் அவர்களில் ஒருவனாவது மனமொப்பிச் சண்டை செய்யவில்லை. எல்லாரும் அவனை வெறுத்திருந்தார்கள். 'மக்பெத் கொடும்பாவி, கொடுங்கோலரசன், கொலைபாதகன்' என்பது அவர்களுடைய தீர்மானம். ஆகையால் அவர்கள், 'மால்கம் பக்கத்தில் சேர்ந்துகொள்ள எப்போது சமயம்வரும்!' என்று எண்ணியிருந்தார்கள். மக்பெத்தும் அவர்களை நம்பியில்லை; தானே அகோர யுத்தஞ் செய்தான்; தனது வீரப் பிரதாபத்தை யெல்லாம் வெளியிற்காட்டி உக்ராவேசத்தோடும் ரோஷத்தோடும் பகைவர் சேனையைச் சாடினான்; தன்னை எதிர்த்தவர்களையெல்லாம் தவிடுபொடியாக நூறினான்; மிகவுஞ் சீறினான்; கடைசியாக மக்டப் இருந்த இடத்திற்கு ஏறினான். அவனைக் கண்டவுடனே மக்பெத்துக்கு மாயாவியின் ஆரூடம் ஞாபகத்திற்கு வந்துவிட்டது. 'மக்டப்பைக் குறித்து எச்சரிக்கையாயிரு' என்று மாயாவி கூறினதை அவன் மறக்கவில்லை; அப்படியே நின்றுவிட்டான்; 'திரும்பிப்போய் விடலாமா!' என்று எண்ணினான். அதற்குள், மக்டப் ஓடிவந்து இவனைத்தடுத்து எதிர்த்தான். 'இவனை எப்போது எதிர்க்கலாம்' என்று எதிர் பார்த்திருந்த மக்டப், இவனை இப்படி யப்படி அசையவொட்டாமல் தடுத்துச் சண்டைக்கழைத்தான். இருவர்க்கும் அசாத்திய சண்டை நடந்தது. இவனை மக்டப் விடவில்லை; ஏமாறாமல் தாக்குகிறான்; என்னென்னவோ கேள்விகள் கேட்கிறான்; "அடே, அற்பப்பயலே! உனது வீரத்தைக் கேவலம் பெண்பிள்ளையிடத்திலும் குழந்தைகளிடத்திலும் காட்டினாயே! அடா, கொடும்பாவி! உன்னை நான் சித்ரவதைசெய்து கொல்கிறேன் பாரடா! உன்னைப் பழிக்குப்பழிவாங்காமல் விடமாட்டேனடா பேயா!" என்று ஏசிப்பேசினான். இத்தனை ஏச்சுகளுக்கும் பேச்சுகளுக்கும் இடையிலும், 'எப்படியாவது தப்பி ஓடலாம்' என்று எண்ணுகிறான் மக்பெத். அவனுக்கு மக்டப்பின் மனைவி மக்களைக்கொன்ற பாதகமகத்துவத்தால் ஒன்றுந்தோன்றவில்லை. விழிக்கிறான் 'இவன் பிரமகத்தியின் மகத்துவத்தால் விழிக்கிறான்' என்று கண்டுகொண்ட மக்டப், இவனை இப்படி அப்படி அசையவொட்டாமல் சண்டை செய்கிறான்; "அடே சண்டாளா!

ராஜதுரோகி! கொலைபாதகா! பெண் கொலைசெய்த பேயா! சிசுஹத்தி செய்த தீயா! பரமசண்டாளா! ஏனடா விழிக்கின்றாய்? உனது வீரத்தைக் காட்டடா, கொலைபாதகா!" என்கிறான்.

மக்பெத்துக்கு மாயாவியின் ஆருடம் ஞாபகத்துக்கு வந்துவிட்டது. 'தாய் வயிற்றிற்பிறந்தவன் எவனும் தன்னைக் கொல்லமாட்டான்' என்பதை நம்பியிருந்தான். ஆகையால் அவன் புன்னகை செய்தபடியே மக்டப்பைநோக்கி, "அடே, மக்டப்! வீணாய் ஏனடா, என்னென்னவோ உளறிக் கெட்டுப்போகிறாய்! என்னைவெல்ல உன்னால் ஆகாதடா; உன் கைக் கத்தியால் காற்றைவெட்டுவது எத்தனை சுலபமோ, அத்தனை சுலபமாய் நீ என்னைவெட்டி விடுவாயடா! உன் வாய்க்கு வந்தபடி வீம்புபேசுவதில் என்ன பிரயோஜனம்? எனது உயிர் இந்த உடலைவிட்டு எளிதிற் பிரியாதபடி, மந்திரத்தில் கட்டுப்பட்டிருக்கின்றது ஆகையால் தாய் வயிற்றிற்பிறந்த எவனாலும் அதை வாங்கமுடியாது" என்றான். அதுகேட்ட மக்டப், "அடே போடா, பேயா! உனது மந்திரம் மண்ணாய்ப்போக! அடே மடையா! நீ அந்தப் பேய் வார்த்தையை நம்பி மோசம் போனாயேயடா! என்னைப் பற்றி அது உனக்குச் சொன்னபோது ஒரு விஷயத்தை ஒளித்துச் சொல்லியிருக்கின்றது. நான் எனது தாய் வயிற்றிலிருந்து சாதாரணமாய்ப் பிறந்தவன் அல்லேன். அகாலமாய் அவ்வம்மையின் வயிற்றைக் கீறி என்னை வெளியில் எடுத்தார்கள். இந்த விஷயத்தை உனக்கு ஒளித்துச்சொன்ன மாயாவியை உன்னைப்போன்ற பேயன்தான் நம்பி மோசம் போகவேண்டும்" என்றான்.

அதுகேட்ட மக்பெத்துக்கு நடுக்க முண்டாய்விட்டது; பேய் போல் விழிக்கிறான்; பித்தம் பிடித்தவன்போல் சித்தம் மயங்கிச் சிரிக்கிறான்; "எனக்கு ஒளித்துப்பேசின அந்தப் பேயின் நாக்குப் பிளந்து போகக்கடவது" என்று சபித்தான்; அவனுடைய கடைசி நம்பிக்கையும் ஓடி ஒளித்துக்கொண்டது; "அடடாடாடா! மோசம் போனேனே! கேவலம் பேய்களும் என்னைப் பேயனாக்கி விட்டனவே! உலகத்தில் எவனும் இனிமேல், மாயப்பேய்களின் வார்த்தைகளை நம்பாமல் இருக்கக்கூடவன். அவைகள் பேசும் மோசவார்த்தைகளுக்கும் புனைசுருட்டுப் பேச்சுகளுக்கும் செவிகொடுத்துச் சீரழியாமல் இருக்கக்கடவன். அவைகள் பேசும் பேச்சுக்கு இருபொருள் இருக்கின்றனவே! அவைகளை நம்பினவர்களை ஏமாற்றும்பொருட்டு அவைகள் தந்திரமாய்ப் பேசுகின்றன. பிறகு, அந்தப் பேச்சுகளுக்கு அர்த்தம் வேறாய் அவைகள் அநர்த்தம் உண்டாக்கி விடுகின்றனவே! ஆ! இனியுங்கூடவா, நான் சண்டைசெய்வேன்! மக்டப்! அடே, மக்டப்! உன்னோடு சண்டைசெய்ய எனக்கு இஷ்டம் இல்லையடா!"

என்றான். அதுகேட்ட மக்டப், "ஆனால் சரி பிழைத்திரு! எதற்காகத் தெரியுமா? உன்னை நாங்கள் ஒருகூட்டில் அடைத்துவைத்து எல்லார்க்குங் காட்டுவதற்காக. அந்தக் கூட்டின்மேல் ஒரு பலகையைத் தொங்கவிடுவோம். அதில் என்ன எழுதியிருக்குந் தெரியுமா? 'மனிதரில் இராக்ஷஸன், மஹாபாதகன், கொடும்பாவி எல்லாரும் வாருங்கள், இந்தக் கொடுங்கோலரசனைப் பாருங்கள்' என்று எழுதியிருக்கும்" என்றான்.

"முடியாது, முடியாது! ஒருகாலும் முடியாது. இதோ நான் வந்துவிட்டேன். ஒருகை பார்த்தே விடுகிறேன். அந்தச் சிறுபயல், மால்கம் பாதத்திலா நான் வீழ்ந்து வணங்குவேன்! அவனையா நான் மதிப்பேன்! புலிபசித்தாலும் புல்லைத் தின்னுமா? கேவலமானவர்களைப்போல் நான் உயிர் பிழைத்திருப்பேனா? எல்லாரும் என்னைச் சித்ரவதை செய்யமாட்டார்களா! பர்னம்காடு, டன்ஸினேன் மலைக்கு வந்துவிட்டதும் சரிதான்! தாய்வயிற்றிற் பிறவாத நீ என்னை எதிர்த்துநிற்பதும் சரிதான்! இவைகளெல்லாம் பலித்தனவென்றாலும் நான்மட்டும் பயப்படமாட்டேன். இன்னும் இவைகளுக்குமேல் வரவேண்டியவைகளும் வரட்டுமே! நான் என்ன அஞ்சுகிற பேர்வழியா? உன்னோடு ஒரு கை பார்த்தே தீருவேன்" என்று விருது கூறிக்கொண்டே மக்பெத் மக்டப்பைத் தாக்கினான். இருவர்க்கும் பெரும்போர் நடந்தது. கடைசியாக, மக்டப் மக்பெத்தை அடக்கி, அவனுடைய தலையைவெட்டிக் கையிற்பிடித்து மால்கம்முக்கு வெகுமதியாகக் கொண்டு வந்துகொடுத்தான். மால்கம், மக்டப்பைக் கொண்டாடி, ஸ்காட்லாந்துக்கு உரிமையுள்ள அரசனாய் முடிசூடிக்கொண்டான். சாது என்னும் சிறப்புப்பெயர் பெற்ற டங்கன் அரசனுக்கு முதல் குமாரனாகிய மால்கம் அரசாட்சியில் பிரபுக்களும் பிரஜைகளும் மனமகிழ்ந்து தமது அரசனை வாழ்த்தினபடியே தாமும் சுகமாக வாழ்ந்தார்கள்.

Thompson & Co, Printers, Madras.

இந்நூலில் வந்துள்ள

செய்யுள்களுக்கு உரை.

பக்கம் 5. 'நகுதல்' என்னும் பாட்டு. (குறள்)

நட்டல்—(ஒருவனோடு ஒருவன்) சிநேகம் செய்தல்; நகுதற் பொருட்டன்று—(தங்களுக்குள் சொல்லி நகையாடற் கேற்றவைகளைச் சொல்லி) நகையாடுதற்காக அல்ல; மிகுதிக்கண்—வேண்டாத (அதாவது விரும்பத்தகாத) செய்கைகளை (ஒருவர்) செய்த பொழுது; மேற்சென்று—(மற்றவர்) முற்பட்டு; இடித்தல் பொருட்டு—இடித்துக் கூறித் தடுத்தற்காகவே (சிநேகம் செய்தல்) என்றவாறு.

பக்கம் 6. 'காற்றடிப்பதனால்' என்னும் பாட்டு. (நூலாசிரியர் இயற்றியது) இப்பாட்டின் பொருள் விளக்கமா யிருத்தலின் அரும் பதங்கட்கு மட்டும் பொருள் குறிக்கப்படுகிறது.

கனம்—ஆகாயம்; அரற்றுதல்—புலம்புதல்; அகம்—மனம்; புவனம்—பூமி; சாக்குருவி—சாவு முதலிய அசுபங்களுக்கு அறிகுறியாகக் கூவும் பட்சி, அதாவது ஆந்தை; தேக்கி—நிறைந்து;

பக்கம் 10. 'மகபதி' என்னும் பாட்டு. (நூலாசிரியர் இயற்றியது.) பொருள் வெளி.

பக்கம் 15,16. மாயப்பெண்கள் பாட்டுகள் (நூலாசிரியரால் இயற்றப்பட்டன.) அரும்பதங்கட்கு உரை:

கங்குல்—இரவு; சுறு—ஒருவகை மீன்; இரும்பிலி—ஒருவகைச் செடி; பேய்துடரி—ஒருவகைச் செடி; அதிர்—ஆட்டின் கழுத்தில் தொங்கும் உறுப்பு.

பக்கம் 19. 'நன்றிக்கு' என்னும் பாட்டு. (குறள்)

நல்லொழுக்கம் நன்றிக்கு வித்தாகும்—நன்னடக்கை நன்மைக்குக் காரணமாகி (இம்மையிலும் மறுமையிலும் இன்பமுண்டாக்கும்); தீயொழுக்கம்—கெட்ட நடக்கை; என்றும்—எப்பொழு

தும் (இம்மையிலும் மறுமையிலும்); இடும்பை தரும்—துன்பத்தையே உண்டாக்கும்.

பக்கம் 20. ‘பிறர்க்கின்னு’ என்னும் பாட்டு. (குறள்)

பிறர்க்கு—அயலவாக்கு; இன்னு—துன்பந் தருவனவற்றை; முற்பகல் செய்யின்—(ஒரு பகலின்) முன் பகுதியிற் செய்தால்; தமக்கு இன்னு—(அங்ஙனம் செய்தவராகிய) தமக்கே துன்பந் தருவன; பிற்பகல்—(துன்பஞ்செய்த அந்தப் பகலின்) பின் பகுதியிலேயே; தாமே வரும்—தாமாக வந்து சேரும். (ஒருவர் வருவிக்கவேண்டியதில்லை.)

Printed by Thompson & Co., at the "Minerva" Press,
33, Popham's Broadway, Madras.